**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 37/2022**
**நாள்.17.06.2026**
**வா.சா.1- லட்சுமி**
**க/பெ - சென்னன்**
**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. 08.10.2010ம் தேதி ஆண்டிக்கவுண்டரிடம் இருந்து தாவா சொத்தை நாங்கள் கிரையம் பெற்றதன் அடிப்படையில் சொத்து உரிமைமூலம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

2. ஆண்டிக்கவுண்டருக்கு 18.02.1974ம் தேதிய ஆவணத்தின் அடிப்படையில் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை நாங்கள் வா.சா.ஆ.13ன்படி கிரையம் வாங்கியிருந்தோம்.

3. வா.சா.ஆ.6ல் உள்ள விவரங்களை நான் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது. வா.சா.ஆ.6ல் சொத்துவிவரத்தில் "சுக்காம்பட்டி கிராமம், களத்தூர் நத்தம் சர்வே எண்.1474 குடியிருப்பில் உள்ள வீட்டிற்கு நான்குமால் - ராமசாமி கவுண்டர் வீட்டிற்கும் - கிழக்கு, பழனிச்சாமி கவுண்டர் வீட்டிற்கும் - தெற்கு, கெப்பனகவுண்டர் வீட்டிற்கு - வடக்கு, காலக்கவுண்டர் வீட்டிற்கும் - மேற்கு இந்த மாலுக்குள் கிழமேல் ஜாதியடி 14 1/2, தென்வடல் ஜாதியடி 18 1/2 அளவில் மண்சுவர் வைத்து நாட்டுமரங்கள் போட்டு உள்ள ஓட்டுவீடு" என்று குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை தான் கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.13 கிரையப்பத்திரத்தில் சொத்துவிவரத்தில் சுக்காம்பட்டி கிராமம் அயன்புஞ்சை சர்வே 980ல் 1வது தாக்கு கிழமேல் ஜாதியடி 46, தென்வடல் ஜாதியடி 18க்கு மொத்த சதுரடி 814 அளவுள்ள காலிமனையிடத்தில் கிழமேல் ஜாதியடி 35, தென்வடல் ஜாதியடி 18 1/2 க்கு மொத்த சதுரடி 647 1/2 க்கு RCC கட்டி கட்டிட வீடு என்றும், அதற்கு நான்குமால் கிழமேல் செல்லும் சிமெண்ட் ரோட்டிற்கு வடக்கு, தென்வடலாக செல்லும் சிமெண்ட் ரோட்டிற்கு கிழக்கு, எல்.சண்முகம் வீட்டிற்கு மேற்கு, கரியகவுண்டர் வகையறா வீட்டிற்கும், கோவில் வீட்டிற்கும் தெற்கு என்று 1வது தாக்கு உள்ளது என்றாலும், 2வது தாக்காக அதே சர்வே எண்ணில் கிழமேல் ஜாதியடி 23, தென்வடல ஜாதியடி 22க்கு மொத்த சதுரடி 506 அளவுள்ள காலிமனையிடம் இதற்கு நான்குமால் கோவில் வீட்டிற்கு மேற்கு, கிழமேலாக செல்லும் சிமெண்ட் ரோட்டிற்கு தெற்கு, தென்வடலாக செல்லும்

சிமெண்ட் ரோட்டிற்கு கிழக்கு, கிழமேலாக செல்லும் பொதுபாதைக்கு வடக்கு என்றும் சொத்து விவரத்தில் உள்ளது என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.6 கிரையப்பத்திரத்தின்படி ஆண்டிக்கவுண்டருக்கு 268 அடி மட்டுமே பாத்தியப்பட்டிருந்தது என்றாலும் ஆனால் வா.சா.ஆ.13 ல் அதிக விஸ்தீரணம் காட்டி கிரையம் பெற்றுள்ளோம் என்றாலும் சரியல்ல, மறுபடி மீண்டும் ஆண்டிக்கவுண்டரிடம் இருந்து கிரையம் பெற்றேன்.

6. ஆண்டிக்கவுண்டரிடம் இருந்து ஒருமுறை தான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

7. 12.06.1944, 30.08.1972, 29.01.1974, 18.02.1974 ஆகிய தேதிகளில் ஏற்படுத்தப்பட்ட பதிவு ஆவணங்களின் படி எங்களுக்கு தாவா சொத்திற்கான முன்பாத்திய உரிமை உள்ளதாக வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

8. மேற்கண்ட 4 ஆவணங்களில் உள்ள சொத்துவிவரத்தில் கண்டுள்ள நான்குமாலும் மற்றும் அளவுகளும், எனது கிரையப்பத்திரமான வா.சா.ஆ.13 ல் கண்டுள்ள நான்குமாலும் மற்றும் அளவுகளும் முற்றிலும் முரண்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. முரண்பட்டு தான் உள்ளன என்றாலும் வழக்கிற்காக முரண்பாடாக இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. நாங்கள் குடியிருந்து வரும் வீட்டிற்கு காம்பவுண்ட் சுவர் இல்லை என்றால் சரியல்ல, கட்டியுள்ளோம். தொட்டி, கழிவறை, செப்டிக்டேங்க் ஆகியவை தாவா சொத்தில் உள்ளன என்பதற்கு ஆவணங்கள் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல, பத்திரத்தில் உள்ளது. பத்திரத்தில் அவ்வாறு இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் காம்பவுண்ட் சுவர், தொட்டி, கழிவறை, செப்டிக்டேங்க் ஆகியவை இல்லை என்றாலும், இருந்ததை இடித்துவிட்டார்கள் என்று வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு இடித்ததற்கு புகார் கொடுக்கப்பட்டதா என்றால் புகார் கொடுக்கப்பட்டது, FIR போடப்பட்டது.

10. மேற்படி புகார் மற்றும் FIR நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், அதனடிப்படையில் FIR எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

11. நாங்கள் தான் 1ம் பிரதிவாதியின் சொத்தை இடித்து சேதப்படுத்தியதன் காரணமாக 1ம் பிரதிவாதி எங்கள் மீது புகார் கொடுத்து குற்ற எண்.58/2022 வடமதுரை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் நாங்கள் இடிக்கவில்லை

12. நாங்கள் குடியிருந்து வரும் வீட்டை ஒட்டி கிழக்குபுறம் 1ம் பிரதிவாதி ஈஸ்வரி வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

13. வா.சா.ஆ.13ன்படி எங்களுக்கு சொத்தில் எந்த உரிமையும், அனுபவமும் இல்லை என்றாலும், அதனடிப்படையில் நாங்கள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. முன்கிரையதாரருக்கு உரிமை இல்லாத சொத்தை இருப்பதாக கூறிக்கொண்டு 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கிரையம் எழுதிக்கொண்டு 1ம் பிரதிவாதிக்கு இடைஞ்சல் செய்துவருகிறோம் என்றால் சரியல்ல, அவர்கள் இடைஞ்சல் செய்து வருகிறார்கள்.

14. தாவா சொத்திற்கு எங்கள் பேரில் பட்டா இல்லை என்றால் சரிதான். பட்டா இல்லாத சொத்தில் எங்களுக்கு எந்த அனுபவமும் இல்லை என்றாலும், பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை மிரட்டி பணம் பறிக்கும் எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் எந்த பரிகாரமும் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

15. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 மாதிரி வரைபடம் தவறானது என்றால் சரியல்ல. ஆகையால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**